**கம்பம் நகராட்சி**

**2018–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆம் நாள் (13.08.2018) திங்கள்கிழமை முற்பகல் 11.00**மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

**கூட்டப் பொருட்கள்**

**1.** இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பையின் அளவு கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் மொத்தம் **67500** cu.m அளவு குப்பை சேகரமாகி உள்ளது அறியப்பட்டுள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் 21.02.2018 மற்றும் SBM திட்டம் SHPC கூட்ட நடவடிக்கைகளின்படியும், உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றுவதற்கும் இதர உள்கட்டமைப்பு பணிகள் செய்திடவும், கீழ்கண்டவாறு விரிவான திட்ட மதிப்பீடு ரூ. 617.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | Name of the work | No.of Qty | Amount(in Lakh) |
|---|---|---|---|
| | **I. Micro Compost Center with other infrastructure facilities ( 3 works Rs. 142 lakhs)** | | |
| 1 | Construction of MCC with a capacity of 3 TPD with compound wall at Weekly Market in Cumbum Municipality | 1 No / 3 MT | 47.00 |
| 2 | Construction of MCC with a capacity of 3 TPD with compound wall at Nanthagopalan Nagar Park Site in Cumbum Municipality | 1 No / 3 MT | 47.00 |
| 3 | Construction of MCC with a capacity of 3 TPD with compound wall at Angore Palayam in Cumbum Municipality | 1 No / 3 MT | 48.00 |
| | **Sub Total** | | **142.00** |
| | **II. Procurement of primary collection Vehicles (2 Procurement Rs. 40.20 lakhs)** | | |
| 4 | Prchase of Battery operated Vehicle as per specification. 8 Nos | 8 Nos | 14.40 |
| 5 | Purchase of Light Commercial Vehicle 2cu.m capacity as per specification 3 Nos | 3 Nos | 16.80 |
| | **III. BIO MINING** | | |
| 6 | Removing the Legacy waste of 67500 cu.m through Bio Mining process to Reclaim the existing dump yard located at Angore palayam in Ciumbum Municipality. | 1 No | 444.00 |
| | **GRAND TOTAL** | | **617.20** |

**அலுவலகக் குறிப்பு –** 1) விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2) தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தரகோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1260/2018/இ1)

| | |
|---|---|
| 2. | அரசாணை (எம்.எஸ்) எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.07.2018 ன்படி, 01.04.2018 முதல் சொந்தகுடியிருப்புகளுக்கு 50% மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் வரிச்சீராய்வு மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மன்றத்தின் தகவலுக்கும், பார்வைக்கும் தொடர்நடவடிக்கைக்கும் வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** **1)** மன்றம் பதிவு செய்யலாம்<br>**2)** மேற்கண்ட அரசாணை வழிகாட்டுதலின்படி, பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளத் தேவையான சுயமதிப்பீட்டு படிவம் மற்றும் கணக்கீட்டு தாள் அச்சிடவும், ஆட்டோ, செய்திதாள் மற்றும் அரசு நாளிதழில் விளம்பரம் வெளியிடவும், கணக்கீட்டுதாள் தயார் செய்ய தேவையான எழுது பொருட்கள் வாங்குவதற்கும் இதர தபால் செலவினங்களுக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2828/2018/அ1) |
| 3. | கம்பம் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் 2018—19ன் கீழ் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்திட சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 12981/2018/இ3—ன் 27.6.2018ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஆதார பங்கீடு வரப்பெற்றுள்ளது. |

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்ட மான்ய நிதி | : | ரூ. 2.66 கோடி |
| மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மான்ய நிதி | : | ரூ. 2.10 கோடி |
| மாநில நிதிக்குழு மான்ய ஊக்க நிதி | : | ரூ. 1.54 கோடி |
| நகராட்சி பங்களிப்பு தொகை | : | ரூ. 0.70 கோடி |
| **மொத்த மதிப்பீட்டுத் தொகை** | **:** | **ரூ. 7.00 கோடி** |

மேற்கண்ட நிதிஆதார பங்கீட்டின் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் சாலை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு விரிவான திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீடு ரூ லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | வார்டு எண். 3 வாரச்சந்தை, வா. எண். 20 கம்பராயப் பெருமாள் கோவில் தெரு, வரதராஜபுரம் கொண்டித்தொழு தெரு, வார்டு எண். 28, கிராமசாவடி தெரு, சின்னவாய்க்கால் ரோடு, வா. எண். 31, காந்திநகர் குறுக்குத் தெரு, கக்கன் காலனி மெயின் ரோடு மற்றும் நகராட்சி குறுக்கு தெருக்களில் தார்தளம், பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்தல், வாரசந்தையில் உள்ள நுண்உரம் செயலாக்க மையம், நந்தகோபால நகர் பூங்கா வளாகத்தில் உள்ள நுண்உர செயலாக்க மையம், ஆங்கூர் பாளையம் நுண்உர செயலாக்க மையம் ஆகியவற்றில் அணுகு சாலை அமைத்தல். | 200.00 |

| | | |
|---|---|---|
| 2 | வார்டு எண். 1 கோம்பை ரோடு குறுக்கு சந்து, வா.எண். 3 குரங்குமாயன் மெயின் தெரு (வடக்குபகுதி), எல்.எப். ரோடு பெட்ரோல் பங்க் வடிக்குச் சந்து, உலகத்தேவர் 8வது சந்து, வா.எண்.20 வேலப்பர் கோவில் தெரு, வா.எண்.9 சுப்பிரமணிய சாமி நகர், வா.எண்.28 சுருளிப்பட்டி ரோடு மற்றும் வா.எண். 31 நந்தகோபால் நகர் தெருக்களில் தார்தளம், பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்தல். | 250.00 |
| 3 | வார்டு எண்.1 கோம்பை ரோடு குறுக்கு தெரு, வா. எண். 3 எல்.எப். ரோடு குறுக்கு தெரு, உலகத்தேவர்1வது சந்து, வா.எண்.4 மாலையம்மாள் புரம் பி.எஸ்.என்.எல் அலுவலக சாலை, பேருந்து நிலையம் (கருப்பத்தேவர் பர்னிச்சர் மார்ட்) முதல் கே.கே.பட்டி சாலை வரை, வா.எண். 18 ஓடைக்கரைத் தெரு, வா.எண்.28 சுருளிப்பட்டி மெயின் ரோடு, வா.எண். 25 டி.எஸ்.கே. நகர், வா.எண். 29 ரேஞ்சர்ஆபிஸ் ரோடு, மற்றும் வார்டு எண். 31 நந்தகோபால நகர், சுக்காங்கல் பட்டி ரோடு, சி.எம்.எஸ் நகர் குறுக்குத் தெரு மற்றும் வா.எண். 33 ஏகலுத்து குறுக்கு தெருக்களில் தார்தளம், பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்தல் | 250.00 |
| | மொத்தம் | 700.00 |

மேற்கண்டவாறு நிதி ஆதார பங்கீட்டின் அடிப்படையில் ரூ. 7.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மேற்கண்ட பணிகளுக்கு நகர்மன்ற தீர்மான எண்.1531 நாள் 29.06.2018 இல் ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. தற்போது வ.எண். 1 வாரசந்தையில் உள்ள நுண்உரம் செயலாக்க மையம், நந்தகோபால நகர் பூங்கா வளாகத்தில் உள்ள நுண்உர செயலாக்க மையம், ஆங்கூர் பாளையம் நுண்உர செயலாக்க மையங்களில் அணுகு சாலை அமைப்பது அவசியமாவதால் திட்டமதிப்பீட்டிற்கு மிகாமல் பணிகள் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2322/2018/இ1)**

**4.** கம்பம் நகராட்சி எல்லைக்கு மற்றும் எல்லைக்கு அருகில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்கவும், பாதுகாப்பினால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொது மக்களிடம் போதிய விழிப்பிணர்வு ஏற்படுத்திட குழு அமைத்தும் செயல்படுத்திட உருவாக்கப்பட்ட உயிரியியல் பண்முகச்சட்டம் **2002** **(** Biological Diversity Management Act 2002 **)** மற்றும் உயிரியியல் பண்முகச்சட்ட விதிகள் **2004 (**Biological Diversity Management Rule 2004 **)** , மன்றத்தின் மேலான தகவலுக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு .. மன்றம் பதிவு செய்யலாம் **(ந.க.எண். 3058/2018/எச்1)**

**5.** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையில் பிரேதங்களை எரியூட்டுவதில் பயன்படுத்தி வரும் உபகரணங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் பிரேதங்களை எரியூட்டுவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே, சுகாதார நலன் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் நவீன எரிவாயு தகன மேடையில் பழுது ஏற்பட்டுள்ள உபகரணங்களை சரிசெய்யவும், முற்றிலும் சேதமடைந்த உபகரணங்களை மாற்றிடவும், உபகரணங்கள் சப்ளை செய்திட கோரியும் , மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. **9,60,000/–** க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :– 1)** மன்றம் அனுமதிக்கலாம் **(ந.க.எண். 382/2018/இ1)**

| | |
|---|---|
| 6. | இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டிராக்டர் டி.சி.யு. 9465வாகனத்தில் உள்ள மின்கலன் (Battery) பழுதாகி விட்டதால் புதிதாக பேட்டரி சப்ளை செய்யவும், மெயின்வயர், எர்த் வயர் மற்றும் டர்மனல் புதிதாக பொருத்தும் பணி மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு மற்றும் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி குடிநீர் டிராக்டர் டி.யு.சி. 9465 வாகனத்திற்கு புதிதாக பேட்டரி , மெயின்வயர், எர்த் வயர் மற்றும் டர்மனல் பொருத்தும் பணி செய்தல் | 1)பெரியார் பேட்டரி சென்டர், 444–எ2, குமுளி ரோடு, கம்பம் | ரூ. 9,800/– |
| | | 2)விநாயகா பேட்டரிஸ், எல்.எப். ரோடு, கம்பம் | ரூ. 9,950/– |
| | | 3)ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், நகராட்சி அலுவலகம் எதிர்புறம், கம்பம். | ரூ. 9,450/. |

அலுவலகக்குறிப்பு.. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், கம்பம் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 7. | இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தாத்தப்பன் குளம் மேல்நிலைத் தொட்டி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் இல்லாமல் உள்ளதால் முற்றிலும் பாதுகாப்பற்ற நிலையில் சுகாதாரம் இல்லாமலும், வெளிநபர்களால் அசுத்தப்படுத்தப்பட்டும், அடையாளம் தெரியாத நபர்களால் அவ்வப்போது மேல்நிலை தொட்டி மீது ஏறி வருவதாகவும் தெரியவருகிறது. எனவே, மேற்கண்ட இடத்தின் அருகில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள கழிப்பிடத்தின் ஒரு பகுதியினை நகராட்சி குடிநீர் குழாய் பொருட்கள் இருப்பு வைப்பு அறை (குடோன்) ஆக மாற்றிடவும், மேல்நிலை தொட்டியை சுற்றி சுற்றுச்சுவர் மற்றும் தளம் அமைத்திடவும், அருகில் உள்ள மேல்நிலை தொட்டி ஏணி படியில் உள்ள பழுது பணிகள் செய்திடவும் இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.5,00,000/–க்கான (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு: 1)**மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2)செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1938–8/2018/இ1) |
| 8. | இந்நகராட்சிக்குச் சொந்தமான மினிலாரி வாகனம் TN 60 Y 1959 –க்கு 100 ஆமஸ் 12 வோல்டேஜ் உள்ள புதிய பேட்டரி வாங்குவதற்கு 10.08.2018ம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | பேட்டரி ஒன்றின் விலை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.பி.முருகன்<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம். | 11,900 |
| 2. | விநாயகா பேட்டரிஸ்,<br>யுவராஜா தியேட்டர் எதிரில், கம்பம். | 13,000 |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல், கம்பத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.1277/2018/எச்1)**

9. தனி அலுவலரின் முன் அனுமதியின்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4504 டம்பர் பிளேசர் லாரிக்கு மராமத்து பணிகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு 10.08.2018–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1. | திரு பி.முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம்.<br>கம்பம். | 1,14,900/– |
| 2. | திரு S.முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்,<br>கம்பம். | 1,29,500/– |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1988/2018/எச்1)

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 13.08.2018**
**இடம். கம்பம்**